# பொதுக்காலம் 15ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைவனின் அழைப்பை உணரவும், படைப்பின் மேன்மையை அனுபவித்து மகிழவும் இங்கு அழைக்கப்பட்டிருக்கும் இறைமக்களை பொதுக்காலம் பதினைந்தாம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடன் அழைக்கிறோம்.

"நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவ திருக்கூட்டம்" என்று மன்னனின் மக்களாக நம்மை முடிசூட்டி அழைக்கிறார் ஆண்டவர். இறைவனின் மக்களாகிய நாம் அவரது பாதையில் நடந்து அவரது விழுமியங்களை நமது வாழ்வில் வெளிப்படுத்தும் போது தான் நாம் அழைப்புக்கு ஏற்ற வாழ்வு வாழ்பவர்கள் ஆகிறோம்.

இவ்வுலகில் இயேசு வாழ்ந்தது என்னவோ 33 ஆண்டுகள் தான். ஆனால் 2000 ஆண்டு கடந்தும் அவர் துதியை பாடிக் கொண்டிருக்கிறோம், அற்புதங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் இயேசு மனித வாழ்வில் புனிதத்தை வெளிப்படுத்தியதால் தான். அவரது நற்செய்தி போதனையால் அவர் பின் சென்றவர்களை விட மரணத் தருவாயிலும் கள்வனைக் கூட மன்னித்த மகா உத்தம வாழ்க்கையினால்தான் அனேக மக்கள் அவரை பின்தொடர்ந்தனர்.

இன்றைய வாசகங்களில் கூட ஆடுமேய்ப்பவனை அருள்பொழிவு செய்து இஸ்ரயேல் மக்களுக்கு நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்புகிறார். ஆம், இறைவாக்கு உரைத்து உள்ளங்களை வெல்கிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்திலும் இறைவன் இயேசு தம் சீடர்களை அழைத்து நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்புகிறார் இறை வார்த்தைகளையும் அனுபவங்களையும் மட்டுமே எடுத்துச் செல்லவும், அனுபவிக்க எதையும் கையோடு கொண்டு செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது அறிவுறுத்துகிறார். இன்றைய சூழலில் இறை ஊழியம் என்பது இறை ஊழியம் என்பது பகட்டான வாழ்க்கையை வெளிப்படுத்துவதாகவே உள்ளது. இயேசு தன்னோடு தங்கி பணி செய்வதை விட தன் மதிப்பீடுகளோடு உலகெங்கும் சென்று பணி செய்ய அனுப்பப்படுவதே சிறந்தது என்று விரும்புகின்றார். நற்செய்தி அறிவிப்பவர்கள் கடவுளை மட்டுமே நம்பி தங்கள் பணிகளைச் செய்ய வேண்டும்.

தங்களோடு பணப்பையை எடுத்துச் செல்லாமல் தன்னையே கையளித்த இறைவனின் வல்லமையை எடுத்துச் செல்வோம். இயேசுவிற்காக சாட்சிய வாழ்வை முன் நிறுத்துவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. உலகெல்லாம் சென்று படைப்பிற்கு நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று கூறி நற்செய்திப் பணி செய்ய நீர் தேர்ந்தெடுத்த திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் உமது வல்லமையோடு திருச்சபை செழித்து வளர உழைக்கும் அருள் தர வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. நற்செயல்களின் மூலம் மக்களை தம்மோடு அணைத்தவரே எம் இறைவா!

இந்நாட்டை ஆளும் தலைவர்கள் ஏதேச்சாரப் போக்கு மற்றும் அதிகார போக்கைக் கைவிட்டு தனக்குரிய கடமைகளை தவறாமல் செய்து நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. இறைவாக்கு உரைக்க அழைப்பவரே எம் இறைவா!

மறைப்போதக நாடுகளில் நற்செய்திப் பணி செய்து வரும் எம் சகோதர சகோதரிகளை பாதுகாத்து வழிநடத்தவும் இளைஞர் இளம்பெண்கள் அதிகமாக இறை பணியில் ஆர்வம் கொண்டு தேவ அழைத்தலை உணர்ந்து கொள்ளும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. இரக்கத்தின் இறைவா!

எம் பகுதி வாழ் மக்களை ஆசீர்வதியும் மக்களின் வாழ்வு ஏற்றம் பெறவும் குடும்பத் தேவைகள் இறைவனால் சந்திக்கப்படவும் பொருளாதாரம் மேம்படவும் நாங்கள் சந்திக்கும் மனிதர்கள் வழியாக உமது திருவுளம் அறிந்து செயல்படவும் வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் அன்பு செய்யவும் வரம் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com